திருந்த இலங்கையின் பிரதமர், அமெரிக்கத் தூதுவர், இந்தியத் தூதுவர், சகல பத்திரிகைகளின் ஆசிரியர்கள் ஆகியோருக்குக் கடித மொன்றை எழுதி அதனை உரியவர்களுக்கு அனுப்பிவைக்குமாறு தனது நண்பன் ஒருவருக்கு அனுப்பிவைத்திருந்தார். அந்தக் கடிதத்துடன் தனது நிலைமை தொடர்பாக நண்பனுக்கு ஒரு சிறிய கடிதத்தையும் அனுப்பியிருந்தான். அந்தக் கடிதங்கள் இங்கே பிரசுரமாகின்றன.

15.01.1974

அன்புமிகு நண்பா,

எனது கண்ணீர் நிறைந்த பொங்கல் வாழ்த்துக்கள்.

10.01.1974இல் நடந்த சம்பவமும் பொலீஸ் அட்டூழியமும் அதனால் ஏற்பட்ட தாக்கமும் இன்னும் நெஞ்சைவிட்டகலவில்லை. காங்கேசன்துறை இடைத்தேர்தல் நடக்கவேண்டு மென்பதற்காகப் பொறுமையுடன் இருக்கச் சொன்னீர்கள். இருந்தும் என்ன பயன்? பொலீஸார் தாங்களாகவே குழப்பத்தை உண்டுபண்ணுகின்றனர். அடுத்த பொங்கல்வரை நான் உயிருடன் இருப்பது நிச்சயமில்லை. அதற்கிடையில் நான் இறக்க நேரிடின் தயவுசெய்து இக்கடிதத்தில் போதிய பிரதிகள் எடுத்து முக்கியமானவர்களுக்கு அனுப்பிவைக்கவும்.

இங்ஙனம் தங்கள் இனிய நண்பன்,
பொன்னுத்துரை சிவகுமாரன்.

## முக்கியமானவர்கள் பார்வைக்கு அனுப்பவேண்டிய கடிதம்

இதை எழுதும் சிவகுமாரனாகிய நான் எச்சமயத்திலும் உயிர்விடலாம். அமைதியாக இருந்தால் காங்கேசன்துறை இடைத்தேர்தலை நடத்துவோம் என்று பிரதம மந்திரி வாக் குறுதியளித்ததால் இதுவரை அமைதியாக இருந்தோம். என்னால் மேலும் பொறுக்க முடிய வில்லை.

தமிழர் ஒருபோதும் தாங்கள் வேறு ஒரு மொழி பேசும் இனத்தினால் ஆளப்படுவதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். பிரிட்டிஷ்காரரே காலமறிந்து எல்லா நாடுகளுக்கும் சுதந்திரம் கொடுத்தனர். அப்போது சுந்தரலிங்கம் போன்ற எமது தலைவர்கள் விட்ட பிழையால் எமது தலைவிதியை சிங்கள இனம் நிர்ணயிக்கும் தவறு ஏற்பட்டது. தற்செயலாக ஏற்பட்ட இத்தவறுக்காகத் தமிழினம் நீண்டகாலம் அடிமையாக இருக்கவேண்டுமா? சிங்கள இனத் துக்கு இருக்கும் ஆசை எங்களுக்கு இருக்கக்கூடாதா? போராடி அழிவேற்படுத்திய பின்னர் தான் எமக்கு சுயநிர்ணய உரிமை கிடைக்குமா? அல்லது நிலைமை அறிந்து அரசோ நமது தலைவர்களுடன் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளுமா?

அரசின் முற்போக்கு நடவடிக்கைகளை ஆதரிக்கும் நாம், அதே நேரத்தில் படுபிற்போக்கு நடவடிக்கைகளையும் சர்வாதிகாரத்தையும் எதிர்க்கிறோம். வாழு; வாழ விடு என்பதே எமது கொள்கை. சிங்களமக்களை ஏமாற்றி அவர்கள் மனதில் வகுப்புவாதத்தைத் தூண்டி விட்டு, ஆட்சியில் நீடிக்க எண்ணுகிறது அரசு, அதனால்தான் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முயற்சி செய்யவில்லை.

சோசலிச நாடுகளில் சிறுபான்மை இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு. சர்வாதி கார பாசிச ஆட்சியில்தான் இப்படியான கொடுங்கோல் நடக்கும்.